மருத்துவர்களுக்குத் தேர்வு கிடையாது. Interview கிடையாது. நேரடியாக மூன்று மாதத்திற்கு ஒருமுறை அவர்கள் walk-in selection மூலமாக online-ல் apply செய்து, online-லே அவர்கள் விரும்புகின்ற இடத்தைத் தேர்வு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அரசாணை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்களும் நியமிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். முதன்முதலாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க G.O. மூலமாக 433 speciality மருத்துவர்கள், கலந்தாய்வு மூலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு 7,243 செவிலியர்களின் வழக்குகளெல்லாம் முடிக்கப்பட்டு, அவர்களுக்கும் notification செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற செய்தியையும் இந்த அவையிலே நான் பதிய வைக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, மருத்துவத் துறையிலே ஒரு மிகப் பெரிய வளர்ச்சியை Tamil Nadu Vision-2023 என்ற இலக்கை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எட்டியிருப்பதற்குக் காரணம், (மேசையைத் தட்டும் ஒலி) human resource என்று சொல்லக்கூடிய, மனித வளம் என்று சொல்லக்கூடிய இந்தப் பணியாளர்கள் நியமனமும்தான் அதற்கு அடித்தளம் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லி, மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்களின் நியமனத்தால் ஓர் அற்புதமான சூழலை, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அனைத்துச் சாதனைகளும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களையே சாரும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

[2015 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நிதிநிலை அறிக்கையின்மீது பதிலுரை ஆரம்பித்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க இருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, பதிலுரை ஆரம்பித்துவிட்டது. நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அதைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு இப்போது நேரம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி.வி. கதிரவன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு)*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சேர்ந்த திருமதி எஸ். விஜயதரணி மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 11-50

4. வரவு–செலவுத் திட்டம், 2015–2016, பொது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான அற்புதங்கள் பூமியை சொர்க்கம் ஆக்குகின்றன; ஆன்மிக அற்புதங்கள் மனிதர்களின் அகவாழ்வை அழகாக்குகின்றன; அரசியல் அற்புதங்கள் மானுடத்தின் புறவாழ்வை புதுப்பிக்கின்றன; இம்மூன்று அற்புதங்களின் சிருஷ்டி கர்த்தாக்களையே சிறந்த உயிர்களாக புகழ் செறிந்த பெயர்களாக உலகமே போற்றிப் புகழ்கிறது; புகழ்மாலை சூட்டுகிறது; அவ்வகையில், தம் பேரறிவுத் திறத்தால் பீடுநடை மறத்தால், அயராத உழைப்பால், அர்ப்பணிப்பு குணத்தால், சூழவரும் பகைகளை சுக்கு நூறாக்கும் வீரத்தால், (மேசையைத் தட்டும்*